**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.61/2019**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி D. ஞானசௌந்தரி, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | மதம் | : இந்து |
| த/பெ | : மன்னார் | ஜாதி | : -- |
| வயது | : 46 | கிராமம் | : ராமாபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.06.2026**
**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது ஆதார் அட்டை அசல் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அட்டை சா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)